# Kandha Purana :: :: :: Rahasyam.

FIRST PART

BY

S. R. MUNISWAMY

SRIRANGAM

---

PUBLISHED BY

V. SUNDARAJ Avl.,

South Car Street, DINDIGUL

---

PRINTED AT THE

NATARAJAH PRESS, "KAMALA VILAS"

TRICHINOPOLY

---

1932 [2 Annas

O-,15KA,K
N32
170841

## "புதுவை முரசு" பத்திராதிபர்

## ழர் பொன்னம்பலனார் அவர்களின் மதிப்புரை.

---

"கந்தபுராண இரகசியம்" என்ற வெளியீடு ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். அது ஸ்ரீரங்கம் தோழர் **S. R.** முனிசாமி அவர்களால் திரு. கச்சியப்ப சுவாமிகள் பாடலின்படி செய்த வசனகாவிய ஆராய்ச்சி நூலை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டு எழுதப்பெற்ற வெளியீடாகும். கந்தபுராணத்தைப் பற்றிக்கூறும்போது எல்லோரும் ஒரு சிறப்புரை கூறுவார்கள். அதாவது:— "கந்தபுராணத்திலுள்ள புளுகு வேறு எந்த புராணத்திலுமில்லை" என்பதாகும்.

நமது புராணங்களின் ஆபாசங்களையும் கடவுள்களின் உற்பத்திகளையும் அதன் திருவிளையாடல்களையும்பற்றி எழுதிவைக்கப்பட்டுள்ள எல்லா புராணங்களையும் படித்துத்தெரிந்துகொள்ளமுடியாதவர்கள் "கந்தப்புராணம்" ஒன்றைமட்டும் பகுத்தறிவுடன் படித்தால் அதிலுள்ள பொய்க்கற்பனைகளும், புரட்டுகளும், ஆபாச நடவடிக்கைகளும், கடவுள் உற்பத்தியின் வரலாறும் தெற்றென விளங்கும். புராண ஆபாசங்களைப் பகுத்தறிவுடன் படித்த எவரும் வெறும் புராணமுட்டையாகஇருக்கமாட்டார்கள். அறிவியல் வாதியாகவேயிருக்க விரும்புவார்கள்.

நமது சுயமரியாதை இயக்கத்தால் வேதபுராண ஆபாசக் குப்பைகட்கு எங்கும் தீ மூட்டப்படுகிறது.

இச்சமயத்தில் ஸ்ரீரங்கம் தோழர், **S. R** முனிசாமி அவர்கள் "கந்தப்புராண ரகசியம்" என்ற வெளியீட்டின் மூலம் புராண ஆபாசங்களை வெளியிட முன்வந்ததைப் பாராட்டுகிறோம். அதிலும் எல்லா புராணக்குப்பைகளும் விலையாகவேண்டியதும், புராண பைத்தியர்கள் வந்துகூடி புராணப்பெருமை பேசுவதில் தலை சிறந்த "க்ஷேத்திரங்கள்" பலவற்றுள் ஸ்ரீரங்கமும் ஒன்றாகும். அந்த ஸ்ரீரங்கத்திலிருந்தே "புராண ஆபாச ஆராய்ச்சி" வெளியீடுகள் தோன்றுவது அறிவியல் வாதிகளால் பெரிதும் பாராட்டத்தக்கதாகும். ஸ்ரீரங்கம் ஏகாதசி மண்டபத்தில் விலையாகும் பழைய புராணக் கடைகளோடு நமது தோழர் அவர்கள் அங்கு நமது புதுப்புராண ஆராய்ச்சி வெளியீட்டுக்கடை ஒன்று திறந்து வைப்பாரென்று நம்புகிறோம். கந்தப்புராண இரகசியத்தைப்போன்று பலவெளியீடுகள் வெளியாகுமென்று எதிர்பார்க்கிறோம்.

புராண ஆபாசங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள். "கந்தப்புராண இரகசியம்" என்ற வெளியீட்டைப் படிக்கவேண்டுவது அவசியமாகும்.

புதுச்சேரி }
18—3—32 }

"பத்திராதிபர்"
புதுவை முரசு.

# "கந்தபுராண இரகசியம்"

திரு. கச்சியப்ப சுவாமிகள்

பாடலின்படி செய்த வசனகாவிய ஆராய்ச்சி

## முதலாம் பாகம்.

(தக்ஷணகாண்டம்)

ஆக்கியோன்

தோழர் **S. R.** முனி

ஸ்ரீரங்கம், திரிசிரபுரம்.

திரிசிரபுரம்

நடராஜா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று

திண்டுக்கல்

திரு. வே சுந்தரராஜ் அவர்களால்

வெளியிடப்பட்டது

விலை] **1932** [2 அணா

# முன்னுரை.

நண்பர் S. R. முனிசாமி அவர்கள் "கந்தபுராண ஆராய்ச்சி" என்ற இன்னூலை மிகுந்த சிரமமெடுத்துக்கொண்டு வரைந்திருக்கின்றார்களென்றே எண்ணுகின்றேன். அளவுக்குமீறிய பொய்யை புளுகும்பொழுது "இந்தப் புளுகு கந்தபுராணத்திலுமில்லை" என்று கூறுவது தமிழ்நாட்டு வழக்கமாக இருந்து வருகிறது. கந்த புராணத்தில் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்ற விஷயங்கள் பல உள என்பதற்கு இப்பழமொழியே போதுமான சான்றாகும். புராண ஆசிரியர்கள் கந்தனுடைய மகிமையை வளர்க்க எண்ணி எழுதிய இந்நூலானது நேர்மாறாக முடிந்துவிட்டதாகவே அறிவாளிகள் கருதுகின்றனர். கச்சியப்ப சுவாமிகள் அருமையான தமிழ்மொழியில் இப்புராணத்தை மொழிபெயர்த்திருக்காவிடில் இம்மாதிரி ஒரு நூல் உண்டு என்பதை தமிழர்கள் அறிந்திருக்கவேமாட்டார்கள். கந்தன் வேறு; முருகன் வேறு; கந்த புராணம்; முருகன் புராணமன்று என்ற சொற்கள் தமிழ்நாட்டுப்பண்டிதர்களிடத்திலிருந்து வெகு காலத்திற்கு முன்பே வெளிவந்துவிட்டது. இப்போராட்டம் இன்றுவரை ஒழிந்தபாடில்லை என்றாலும் கந்தபுராண நிகழ்ச்சிகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் எந்த விதமான தொடர்புமில்லை என்பது முடிந்தமுடிபாகும்.

மரத்தாற்செய்த யானை வாகனத்தை ஒருவன் காணும்பொழுது "இது ஆண் யானையா, பெண் யானையா?" என்று கவனிப்பானாயின், அந்த யானை செய்யப்பட்ட மரம் அவனுடைய கண்களுக்குத் தோன்றுவதில்லை. அடுத்த நிமிடம் இது எந்த மரத்தால் செய்யப்பெற்றது என்று மரத்தைக் கவனிக்கும்பொழுது அவனுடைய கண்களுக்கு யானை தோன்றுவதில்லை. இது போலவேகந்தன்மீதுவைத்த அளவுகடந்த பக்தியைக்கொண்டு கந்தபுராணத்தைப்பார்க்கும்பொழுது அதிலுள்ள ஆபாசங்கள் தோன்றுவதில்லை. கந்த புராண ஆபாசங்களை நோக்குகிறவர்களுக்கு கந்தனுடைய மகிமை தோன்றுவதில்லை. இதுவே இக்கால நிலைமையாகும். எது எப்படியாயினும் தக்கன் வேள்வி நிகழ்ச்சியும், தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் நிலைமையும் மஹாவிஷ்ணுவின் மோஹினி அவதாரச்செய்கையும் சைவப்பற்றுக்கொண்ட மனதிற்குக்கூட வேதனையைக்கொடுத்துவிடுமென்பதற்கையமில்லை.

சீர்திருத்த சுழல்காற்றுவீசுகின்ற இக்காலத்தில் வைதீகர்கள்கூட 'புராணம் ஒரு காரணார்த்தமாக பாமரர்களுக்காக எழுதப்பெற்றது. அறிவாளிகளுக்குப் புராணங்கள் அவசியமில்லை' என்று பகிரங்கமாகக்கூற ஆரம்பித்துவிட்டார்கள். எனவே புராணத்தைப்பற்றிய ஆராய்ச்சிகள் அறிவாளி

களுக்கு வீண்வேலையாகத்தோன்றலாம். பாமரர்களுக்காகவே இவ்வாராய்ச்சிகள் வெளியிடப்பெறுகின்றன என்பது மிகப்பொருத்தமான பதிலாகும்.

நண்பர் முனிசாமி அவர்கள் இதுபோன்ற பல ஆராய்ச்சி நூற்களை இன்னும் எழுதிமக்களின்அறிவிற்கு நல்லுணர்வுதந்து மூடநம்பிக்கையைஒழித்து தன்னம்பிக்கையை உண்டாக்கி சீர்திருத்த இயக்கத்திற்கு பேருதவியாளராக விளங்கவேண்டுமென்று விரும்புகின்றேன்.

சகோதர சகோதரிகள் இந்நூலை விருப்பு வெறுப்பின்றி நடுநிலை நின்று ஆராய்ச்சிசெய்து தள்ளுவன தள்ளி கொள்வன கொண்டு நல்வாழ்வு வாழ வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருச்சி
31—3—32

அன்பிற்குரிய.
கி. ஆ. பெ. விசுவநாதம்

---

முத்துராஜ இளைஞர் சங்கத்தலைவர்

## திரு. T. துரைசாமி அவர்களின் அபிப்பிராயம்.

“கந்தபுராண ரகசியம்” என்னும் புத்தகத்தை வரப்பெற்றேம். இந்த நூலின் ஆசிரியர் தோழர் S. R. முனிசாமி அவர்கள் பாலர் முதல் யாவரும் தெளிவுற விளங்கும்படி எளிய நடையில் எழுதியிருக்கிருர். இவை முக்கியமாக பாமர மக்கள்தான் அறியவேண்டியதிருக்கிறது. சிலர் கவிரசம் ததும்பும் காவியங்களைப்பற்றி குறைகூறக்கூடாதென்பர் கவிரசம் ததும்பும் நூல்களை கவி அரசர்கட்கே உபயோகப்படும்படி செய்வதே சாலச்சிறந்தது. அது நீக்கி பழம்புராணக்குப்பைகளில் தெய்வீகத்தன்மையை கற்பித்து பாமரமக்களிடம் பரப்பி அவர்களை எப்போதும் அறியாமையிலேயே மூழ்குமாறு செய்வது அறிவுடமையாகாது. புராணங்களில் தத்துவார்த்தங்களையும் உட்கருத்துகளையும் பெருமை பேசித்திரியும் தமிழ்நாட்டில் ஷை புராண ரகசியங்களை வெளியிட்டு அரிய மதப்புரட்டு, பார்ப்பன புரட்டாகிய கோட்டையை தகர்த்தெறிய எனது நண்பர் முன் வந்ததற்கு பாராட்டுவதுடன் இஃதேபோன்ற இன்னும் பல புராணங்களின் ஆபாசங்களை வெளியிடுவாரென்று நம்புகிறேம். உண்மையையறிந்து மக்கள் நடந்து நலம் பெற வேண்டுமென்ற பெருங்கருணையுடன் இந்நூலை வெளியிட்ட, இந்நூலாசிரியரை போற்றுகிறேம்.

T. Doraisamy.

ஸ்ரீரங்கம்
25—3—32

## திருவாளர். சாமி சிதம்பரனுர் அவர்களின் அபிப்பிராயம்.

ஒவ்வொரு நாட்டு மக்களும், அறிவிலும் திறமையிலும் சிறந்து, முன்னேற்றமடைந்து ஒற்றுமை வாழ்வும் இன்பமும் பெற்றுவரும் இந் நாளில் நமது நாடுமட்டிலும் இன்னும் அடிமைப் படுகுழியிலேயே கிடந்து வருந்திக்கொண்டிருக்கின்றது.

இதற்குக் காரணம் நமது மக்களிடம் படிந்துகிடக்கும் மூடநம்பிக் கையேயாகும். நமது மக்கள் மூடநம்பிக்கையிலேயே பிறந்து, மூடநம் பிக்கையிலேயே வளர்ந்து, மூடநம்பிக்கையைப் புகட்டும் செய்திகளேயே கற்று, மூடநம்பிக்கைகளேயே கையாண்டு வாழும்போது அவர்கள் அறிவு பெறுவதும் திறமையடைவதும் எப்படி?

இவ்வாருன மூடநம்பிக்கை நமது மக்களின் இரத்தத்துடன் ஒன்ருய் விரவியிருப்பதற்கு, அவர்கள் இளம் பருவமுதல் முதிர்ந்த பருவம் வரையி லும், கேட்டும், படிக்கும் பழங்கதைகளேயாகும்.

இந்தப் பழங்கதைகளாகிய புராணங்களின்மீதுள்ள அன்பும் நம்பிக்கை யும்; என்று நமது மக்கள் மனத்தில் இடம்பெருமல் ஒழியுமோ அன்றுதான் அவர்கள்பால் தன்னம்பிக்கையும் தன் முயற்சியும் பகுத்தறிவும் உண்டாகக் கூடும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய புராணங்களுக்குள் புனைந்துரைகளில் தலைசிறந்துதிகழ்வது "கந்தப்புராண"மாகும். "கந்தப்புராணத்தில் இல்லாத புளுகு எந்தப்புரா ணத்திலும் இல்லை" என்று உலகோர் எவரும் முதுமொழியொன்று கூறுவர். இம்முதுமொழி வடமொழியில் உள்ள "ஸ்காந்தம்" என்னும் நூலைக்குறித்து எழுந்ததாகும். இப்பொழுது "தலபுராணங்கள்" எனவழங் கும் ஊர்க்கதைகள் எல்லாவற்றிற்கும் அந்த "ஸ்காந்தம்" என்னும் புரா ணமே ஆதாரமாகும். "சுப்பிரமணியன்" கதையைக்கூறும் தமிழில் உள்ள "கந்தபுராணம்" என்பதும் மேற்கூறிய "ஸ்காந்தம்" என்பதிலிருந்து வந் ததேயாகும். முதநூலாகிய ஸ்காந்தமே கட்டுக்கதையென்று சொல்லப்படு மாஞல், அதன் சார்பிலிருந்து பிறந்த மற்றைய புராணங்கள் யாவும் புனைந் துரைகள் என்று சொல்லவும் வேண்டுமோ?

இந்த கந்தபுராணமானது, வைணவர்களுக்கு இராமாயாணம் எப்படி சிறந்ததாக இருக்கின்றதோ அதைப்போல் சைவர்களுக்குச் சிறந்ததாக இருக்கிறது. ஏறக்குறைய கதையும் இராமாயணம் போலவேதான் இருக்கும்.

அன்றியும் இராமாயணத்தைக்காட்டிலும் கந்தபுராணத்தில் பல தனிக் கதைகள் உள்ளன. அவைகளெல்லாம் புனைந்துரைகளே.

இத்தகைய கதைகளையெல்லாம் உண்மையென நம்பி அவைகளின் மேல் அன்புகொண்டு சோம்பேரிகளாகவும், பார்ப்பனர்களையும், சடங்குகளையும் நம்பி பொருள்களை வீணாக்குகிறவர்களாகவும் ஆகின்ற மக்கள் பலர். ஆகையால் இதுபோன்ற புராணங்களின்மீது மக்கள் கொண்டிருக்கும் குருட்டு நம்பிக்கையை ஒழிக்கவேண்டுவதே சீர்திருத்தவாதிகளின் முதற் கடமையாகும்.

ஆகையால் "கந்தபுராண ரகசியம்" என்ற பெயருடன் இப்புத்தகத்தை எழுதிய தோழர் S. R. மூனி அவர்களுடைய முயற்சியைப்பாராட்டுகின்றேன். இந்த முறையிலேயே கந்தபுராணத்தின் மற்ற பகுதிகளையும் வெளியிடுதல் நமது நாட்டுமக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்குப் பேருதவியாகுமென்பதே எனது உள்ளக்கிடக்கையாகும்.

பாபனாசம்
16-3-1932

இங்ஙனம்,
(ஒப்பம்.) சாமி சிதம்பரன்.

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 3 | மகளைப்பெறுதலும் | மக்களைப்பெறுதலும் |
| 9 | 28 | பார்வதி | பரமன் |
| | | கொண்டிருந்தாள் | கொண்டிருந்தான் |
| 13 | 1 | இப்பேர்பட்டினங்களையுடைய | இப்பேர்பட்ட தனங்களையுடைய |

# கந்த புராண ஆராய்ச்சி.

## அத்தியாயம் 1

### தக்கன் மகளைப்பெறுதலும், சந்திரன் சாபமும்.

1. பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிர்மபுத்திரனுகிய தக்கன் தக்கமாபுரியில் வசித்து வந்தான். இவன் தவம் பல புரிந்து அரும் வரங்கள் பெற்றவன். இவன் மனைவி வேதவல்லி என்பாள். (இவள் பிரம்மனுடைய பாதத்தில் பிறந்தவள்) வேதவல்லியிடத்தில் தக்கனுக்கு ஆயிரம் புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுக்கு தக்க பருவம் வந்ததும் அவர்களை தக்கன் அழைத்து "கானகஞ்சென்று பரமசிவனை நோக்கி கடுந்தவம்புரிந்து பிறப்பிக்கவல்ல வரம்பெற்று வாருங்கள்!" என்ருஞ்ஞாபித்தான். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" யென்பதற்கேற்ப தந்தையின் சொற்படியே மானதமடுக்கரையை அடைந்து, ஓர் யாககுண்டம் நிருபித்து கைலாயநாதனைக்குறித்து வேள்வி (யாகம்) புரிந்து கொண்டிருந்தனர். அச்சமயம் திரிலோக சஞ்சாரி என்ற நாரதர் அவர்களை அணுகி "பிள்ளைகாள்! நீங்கள் யார்? யாரைக்குறித்து தவம்புரிகின்றீர்கள்? எதற்காக? என்ருர். உடனே தக்கன் புத்திரர் "சுவாமி! எம் பிதாவின் கட்டளைப்படி பிறப்பிக்கவல்ல பிரம்மபதமடைய இம்முறைகொண்டோம்" என்றனர். இதைக்கேள்வியுற்ற நாரதர் அவர்கள் மனதை வேறுபடுத்தி மோக்ஷ வீட்டை அடையும்படி செய்தார். மனதைக்கெடுத்த நாரதர் சத்தியலோகஞ்சென்ருர்.

2. இச்சங்கதி உணர்ந்த தக்கன் பின்னும் ஓராயிரம் மக்களை ஈன்று தன்னுடைய முதலாயிரம் பிள்ளைகளுக்கு உத்திரவிட்டமாதிரியாகவே உத்தரவிட்டான். ஆனுல் இப்பிள்ளைகளும் நாரதமுனி உபதேசத்தால் மோக்ஷ வீட்டை அடைந்தனர். இரண்டாமுறையும் செய்தியுணர்ந்த தக்கன் கடுஞ் சினமடைந்தான். கண்களில் தீப்பொறிகள் சுடர்விட்டு பறந்தன. "இனி அந்நாரதனை சும்மா விடுவேனு?" என்று தன் ஈராயிரம் புத்திரர்களை இழக்கும்படி செய்த நாரதரைப்பார்த்து "ஓ நாரத! என் பிள்ளைகளைப்பிரித்து என்னைக் கலங்க வைத்த நீ ஓரிடத்திலும் நிலையின்றி கலகங்களை விளைவித்துக்கொண்டு திரியக்கடவாய்" என சாபமிட்டான்.

3. பின்பு புதல்வர்களை ஈன்று பலனென்றுமடையாததால் இருபத்தாறு பெண்களை ஈன்று கியாதி, சாம்பூதி, நாரிசன்னதி, ஸ்ம்ருதி, ப்ரீதி முதலிய தவயோகிகளுக் களித்து பின்னும் (இப்போது 27-நக்ஷத்திரங்களென்கிற) இருபத்தேழு பெண்களைப்பெற்று சந்திரனுக்கு மணஞ்செய்வித்தான். அவர்களில் கார்த்திகை, ரோகினி, என்பவர்கள் மிக்கசௌந்தர்யமாக இருந்தபடியால் சந்திரன் அவர்களிடம் அதிக அன்புடனிருந்தான். மற்ற

இருபத்தைந்து பெண்களும் பொறுமையால் தம் தந்தையிடம் முறையிட தக்கன் பெருஞ்சினங்கொண்டு "ஏ! சந்திரனே! நீ என் புதல்விகளைப் பாரபக்ஷமாக நடத்தினதால் உன் கலைகள் தினமொன்றாக அழியக்கடவது!" என சாபமிட்டான். இச்சாபத்தால் சந்திரனுடைய கலைகள் ஒவ்வொன்றாகக் குறைந்தது. சந்திரன் மிக்க வருத்தத்துடன் எஞ்சிய (மீதியிருக்கிற) கலைகளோடு பிர்மாவிடம் சென்று தன் குறையைத் தீர்க்கவேண்டுமென வணங்க, பிர்மா "என்னால் முடியாது; ஒருக்கால் மஹாவிஷ்ணு உன் குறைகளைத் தீர்ப்பார்" என்றார். உடனே சந்திரன் விஷ்ணுவிடம் செல்ல, விஷ்ணுவும் சிவனிடம் செல்லும்படி உத்திரவிட, சந்திரன் ஓடோடியும் வெள்ளியங்கிரியடைந்து வாயலில் காவலிருந்த நந்தியிடம் விடைபெற்று பரமசிவனைத் தரிசனம் செய்ய, சிவன் அன்புடன் சந்திரன் வந்த காரணங்கேட்டு "சந்திரனை எஞ்சிய கலைகளுடன் தன் முடியிலணிந்து கொண்டார். தக்கனுடைய சாபம் இப்போது பலிக்கவில்லை. சந்திரனுக்கு முன் போலவே கலைகள் வளர்ந்தன. (இதைத்தான் அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரை வளர்பிறையாகவும், பௌர்ணமிக்கு மேல் அமாவாசை வரை தேய்பிறையாகவும் கொள்ளப்படுகிறது.) இதுவே கந்தபுராணம் தக்கன் அரசியல் படலத்தில் காணப்படுகிறது.

இனி நாம் சற்று இவ்வுண்மைகளை ஆராய்வோம்.

வாசகர்களே! இதை வாசித்தவரையில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஒவ்வொரு விஷயமும் தென்பட்டிருக்கும் என்பதற்கு மறிப்பில்லை. ஆயினும் இதன் ஆபாசங்களைச்சற்று விவரிப்போம்.

தக்கன் பிர்மாவினுடைய புதல்வன் எனக்கூறப்படுகிறது. இவனை மணந்த வேதவல்லியும் பிர்மாவினுடைய பாதத்தில் பிறந்ததால் இவளும் பிர்ம புத்திரியல்லவா? உண்மையில் தக்கன் பிர்மபுத்திரனாயின் தனது சகோதரியாகிய வேதவல்லியை எப்படி மணம் புரிந்திருப்பான்? அல்லது முறையற்ற மிருக ஜன்மமோ! தக்கன் பிர்மபுத்திரனாயின் வேதவல்லி பிர்ம புத்திரிதானா? பேஷ்! பேஷ்! புராண உலகத்தில் சகோதரனும் சகோதரியும் மணங்கொண்ட விந்தையிது.

இருக்கட்டும்; பிர்மாவின் பாதத்தில் பிறந்தவள் வேதவல்லியாம். அப்படியாயின் நான்முகனுக்கு பாதத்தில் யோனி உண்டா? அதுவும் இருக்க வேண்டிய இடத்திலன்றோ இருக்கவேண்டும்? படைப்புத்தெய்வம் எனப் படுபவனுக்கு யோனிஇருந்திருப்பின் ஆணோ பெண்ணோ! இப்பிர்மா யாரை எப்படிப் புணர்ந்து வேதவல்லியைப் பெற்றானோ! விந்தையிலும் விந்தை!

'பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லல் வேண்டும்.' இவையெல்

லாம் பிராம்ணர் சூழ்ச்சியே. நம்பத்தகாத கட்டுக்கதைகளை நம் இந்துக்கள் மூடர்களென நினைத்து இம்மாதிரி செய்து, தாங்கள் பிழைக்க வேண்டி புத்தக ரூபமாகவும், தெருப்பிரசங்கங்கள் மூலமாகவும் வயிறு வளர்க்கின்றனர். வாசகர்களே! நன்கு யோசியுங்கள்! உண்மைதானா?

தக்கனும் நம்மைப்போல ஒரு மனிசனாகவேயிருக்கவேண்டும். இவனுக்கும் முதலில் ஆயிரம் பிள்ளைகளும் மறுதாரம் ஆயிரம் புதல்வர்களும் பிறந்ததாகத்தெரிகிறது. ஆஹா என்ன புரட்டு! ஒரே தாம் புணர்ந்து ஒரே இரவில் ஆயிரம் குழந்தைகள் பெறவியலுமா? நன்றாக யோசியுங்கள்! ஒரு குழந்தைதான் பெறமுடியுமோ? (முடியவே முடியாது.) சாதாரணமாக ஒருவன் ஒரு பெண்ணைப்புணர்ந்து கருத்தரிக்குமாயின் சுமார் 40 நாள் அல்லது 6 வாரங்கள் சென்ற பிறகு ஓரங்குல நீளமுடைய சிறிய பிண்டம் அவள் வயிற்றில் உற்பத்தியாகிறது. பின்பு 8 வாரம் அல்லது 2 மாத காலத்திற்குப்பின் அப்பிண்டம் மூன்றரை அங்குல நீளமும் இரண்டரை ஔன்ஸ் நிறையுள்ளதாகத்தோன்றுகிறது. இப்படி மாதா மாதம் பிண்டமானது பெரிதாகிப்பெரிதாகி சரியாக ஒன்பது மாதங்களுக்குப்பிறகே சரியான உருவம் பெறுகிறது. பத்தாவது மாதம் குழந்தை உற்பத்தியாகிறது.

இப்படி நடக்க வேண்டியிருக்க தக்கன் 2,000 குழந்தைகளைப்பெற ஈராயிரம் வருடமாயிருக்கவேண்டும். ஆயினும் 2,000 குழந்தைகளைப் பெற்ற தாய் தந்தையர் இருந்திருக்கமுடியுமா? இது நம்பத்தக்கதல்ல.

இப்பூவுலகில் யாராவது தனது மருமகன் இறந்து, தன் புத்ரிகள் விதவையாக வேண்டுமென நினைப்பரோ? தக்கன் உண்மையில் சாபமிட்டிருப்பானா? இருப்பினும் விந்தைதான்.

சாபங்கொண்ட சந்திரனை எப்படி சிவன் தன் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டிருக்கமுடியும்? சிவன் யார் யாரைத்தான் சுமப்பான்? முதலாவது சந்திரனைச்சுமந்து கொண்டிருப்பானா? கங்கையைச் சுமந்து கொண்டிருப்பானா? இதுவும் ஒரு தெய்வந்தான். பைத்தியம் பிடித்து விட்டசனால் தன் தலைமேல் பாரம் ஏற்றிக்கொண்டிருக்கிறான் போலும்! பித்தன்! பித்தன்!

---

## அத்தியாயம் 2.

### விபசாரம் அல்லது பெண் மான் வேட்டை.

முன்னாளில் தாருகாவனத்து ரிஷிகள் யாகம் செய்துகொண்டிருந்தனர். அச்சமயம் மஹாவிஷ்ணு மோஹினி (பெண்) வடிவத்துடன் தவயோகிகள் முன்னே 'காமத்தை' உண்டாக்க எண்ணி நடனமாடினர். எப்போதும்

தெய்வ வழிப்பாட்டிலேயே குடிகொண்டிருக்குமவர், மோஹினியைக்கண்டு மோஹங்கொண்டு, தாம் செய்யவேண்டிய யாக முறைகளை விடுத்து அம் மாதைச்சூழ்ந்துநின்று "பெண்கள் நாயகமே! உந்தன் பெருமைகளைப்புகழ யாவராலும் முடியாது. நாங்கள் முன் செய்த தவப்பேற்றினுல் நீ இவ்விடம் வந்தனை. நீ இடும் பணிகளைச்செவ்வனே செய்து முடிக்கத்தயாராயிருக்கிறோம். நீ விரும்புமனைத்தையும் இத்தருணமே கொடுக்க வல்லோம். ஆனல் ஒன்று; நாங்கள் உன்னைக்கண்ட மறு கணத்திலேயே "மன்மதனென்னும் பாவி மலர்க்கணையைத்தூவி, வாட்டுகிருன் மனம் நோகவே! ஆதலால் உந்தன் அபிப்பிராயம் என்னவோ. உந்தன் கடகங்களணிந்த கரங்களினுல் எங்களை அணைய வேண்டும் இல்லாவிடில் இறப்போம்," என தமது வெளுத்து நீண்ட பற்களைக்காட்டி, கரங்களை ஒன்ருகச்சேர்த்து நீட்டி இரந்தனர்.

இது நிற்க, சிவபிரான் கையில் திருவோடு கொண்டு ஓர் ஆண்டிவடுவெடுத்து முன்பு மோஹினியை விபசாரத்திற்கழைத்துக் கொண்டிருந்த முனிவர்களின் மனைவியர் வசிக்குமிடத்தில் வேதமொழிகளைப்பாடிக் கொண்டு சென்ருர். இவரைக்கண்ட பத்தினிப்பெண்களான முனிவர்களின் மனைவியர், காமவிகாரங்கொண்டு ஓடிவந்து இவரைச்சூழ்ந்து நின்று தம் அவயவங்களில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சிதற தமது உடைகளைக் களைந்து விட்டு, வளையலணிந்துள்ள தம்மொரு கையால் குறிகளை மூடிக் கொண்டு மற்ெருருகையால் விழிகளைப்புதைக்க, தமது காமவுணர்ச்சி அடங்கிற்றில்லையாதலால் மிகவும் வெட்கி அவருக்குப்போதிய உடையும் உண்டியுமளித்து அவரெதிரில் நின்று "சுவாமி! நாங்கள் காமநோயால் கஷ்டப்பட்டு கிடக்கின்ருேம். தயவுசெய்து எம் பிணியைத் தீர்க்கவேண்டும்; இல்லாவிடில் இறந்துபடுவோம்'' என்றிறைஞ்சி நின்றனர். (ஸ்கந்தபுராணம் ததிசியுத்தரபடலமதில் காணப்படுகிறது.

ஆஹா! என்னே இப்புராணம்! எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. மஹாவிஷ்ணு சகல ஜனங்களும் வணங்கும் தெய்வம். இத்தெய்வம் பெண்ணுருவெடுத்து தவமுனிவர்களின் தவத்தைக்கெடுத்தது யோக்கியமா? இப்பாழும் மஹா விஷ்ணு விபசாரத்தை உலகில் நிலைநாட்ட புறப்பட்டனரோ? இருக்கட்டும்; இத்தெய்வந்தான் மூளையில்லாமல் மனிதரைக் குடிகெடுக்கப் புறப்பட்டதே, தாருகாவனத்து முனிகள் பக்தியுடன் தெய்வவழிபாட்டிலிருந்தால் அவர்களுக்கு காமஉணர்ச்சி ஏற்படுமா மோகினியால் மோஹவலையில் சிக்கிய இம்முனிவர்கள் உண்மையானவர்களா? தம்மனத்தை வேறுவழியில் விடாமல் எடுத்த காரியத்தைச் சாதிப்பவ

ரன்றே முனிவர். இல்லறம் நடாத்துமிவர்களுக்கு பரத்தையர்மேல் மோஹமேன்? எல்லாம் பொய் வேஷம். மஹாவிஷ்ணு ஓர் உண்மையான தெய்வமாயின், மக்களைக்கெடுக்கும் மூளை இருக்குமா? ஆண்பாலாகவிருக்கும் இம்மகாவிஷ்ணு எப்படி பெண்பாலாக மாறினர்? மாந்திரீகமோ—ஜெக ஜாலமோ—பேரவுட்டோ! இருக்கலாம்; இருக்கலாம். இப்போது டிராமா வில் ஆண்கள் பெண்வேடங்கொள்வதுபோல் செய்திருப்பார். ஆனல் குறி மட்டும் மாறியிருக்க முடியாது. ஸ்தனங்களுக்கு என்ன செய் தாரோ தெரியவில்லை. இவர் உண்மையான தெய்வமா! டிராமா ஆக்டரா! யோசித்துப்பாருங்கள்.

இருக்கட்டும்; இவர்தான் இப்படி ஆக்ட் செய்தால், ஒரு ராஜபார்ட் தேவையல்லவா? சிவபிரான் புறப்பட்டார். எப்படி? ஆண்டிவேடத்துடன். இதிலாவது நம்ப இடமிருக்கிறது. பொய்சொன்னபோதிலும் பொருந்திய தாகவே இருக்கிறது; எனினும் மூளைகெட்ட முனிவர்கள் மோஹினியிடம் சென்றனர். ஆனல் அவர்கள் மனைவியரோ முக்கண்ணனை நாடினர். பலே! பலே பேஷ்! ஆண்கள் விபசாரம் செய்தால், பெண்களுக்கும் சுதந்திரமில் லையோ? உண்டுபோலும்! இச்சுதந்தரத்தை கந்தப்புராண நூலாசிரியர் கொடு த்திருக்கிறர். நாம் கேட்டால், 'முன்பு உண்மையில் நடந்ததினுல்தான் இப்போது வேசியரும், மணங்கொண்ட மங்கையரும் பரபுருஷ இச்சை கொள்கின்றனரெனவும் சொல்லி நாம் ஏமாந்திருந்தால் ஸ்திரப்படுத்தி விடு வார்' என்பதற்கு சந்தேகமில்லை. இவர் போகட்டும்; எங்கே யாவது பெண்கள் ஒன்றுய்க்கூடி மோஹதாபத்தால் ஒருவனைக்கண்டவுடன் தம் ஆடைகளைக் களைந்துவிட்டு ஒரு கையால் குறிகளை மூடிக்கொண்டும் மற்றொரு கையால் கண்ணை மறைத்துக்கொண்டும் நிற்பரோ! வாசகர்கள் நன்கு யோசியுங்கள். இப்பெண்கள் விபசாரிகளே. உண்மையான ரிஷி களின் பெண்டிரா? விபசாரிகள்கூட நாணுவரே. அதுவுமில்லை இவர் களுக்கு. என்னே இக்கந்தபுராணத்தின் துணிபு! விபசாரம் முன் காலத்தி லும் இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றது போலும்! பொய் சொன்னலும் பொருந்த சொல்லவேண்டும் என்பதை நன்கு உணரவேண்டும். தெய்வங் களின் யோக்கியதையும், தவமுனிவர் பெண்டிர்கள் யோக்கியதையும் பலே பேஷ்! நன்றுயிருக்கிறது!

## அத்தியாயம் 3
### பழிக்குப்பழி.

1. முன் கூறப்பட்ட தாருகாவனத்து முனிவர்கள் தன் மனைவியர் கற்பைக்கெடுத்தவன் பரமசிவனே என்றறிந்து (விபசார அபவாதத்தைப்

போக்க) பழிக்குப்பழிவாங்க எண்ணி ஒரு வேள்வி தொடங்கினர். பன்னாள் நடத்தினர் ஒரு தினம் யாககுண்டத்திலிருந்து அதி பயங்கரமான ஓர் புலி இடியஞ்சும் முழக்கத்துடன் மூன்றும்பிறைபோன்ற கூறிய நகங்களுடையதாய் தோன்றிற்று. முனிவர்கள் அதி ஆனந்தமாக அதை வரவேற்று முக்கண்ணனை கொன்று வரும்படி ஏவினர். உலகமே நடுங்கும்படியாக வெகு கோபத்துடன் அப்புலி சிவலோகத்திற்கு பாய்ந்து ஓட, இதுவறிந்த பரமன் அதனைக்கொன்று அதன் தோலையுரித்து தன் அரையில் அணிந்துகொண்டார். இதை யுணர்ந்த தவயோகிகள் ஓர் சூலம் ஒன்றை யுண்டுபண்ணி விடுத்தனர். பார்வதி பாகன் வெந்தணலை உமிழ்ந்து சுழன்றுகொண்டு தன்னை நோக்கி வந்த சூலத்தை தமது ஆயுதமாகத் தமது திருக்கரத்திலேந்தினார். வெங்கோபமடைந்த முனிவர் பின்னும் ஓர் மானை ஏவ, அண்டமெல்லாமதிரத் தனது கொம்புகளையசைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்துவந்த அம்மானைப் பரமன் புன்னகையுடன் தமது இடதுகையில் ஏந்திக்கொண்டார். முனிவர்கள் இப்போதாவது சும்மாவிருந்தனரா? இல்லை; இல்லை. பின்னும் அளவற்ற கருநாகங்களை யுண்டுபண்ணி ஏவினர். அவைகளோ தம் கொடியவிஷயத்தைக்கக்கிக்கொண்டு பரமனைத்தேடிவந்தன. காளை வாகனன் "நான்திருப்பாற்கடலில் உண்ட விஷத்திற்கு உங்கள் விஷம் எம்மாத்திரம்!" என்றவராய் அவைகளைப்பிடித்து தமக்காபரணங்களாக அணிந்துகொண்டார். முனிவர்கள் அப்பரமசிவனை இன்னும் விட்டார்களில்லை. எண்ணிறந்த பூதகணங்களை யுண்டுபண்ணி ஏவினர். அவர்களையெல்லாம் ஒரு நொடியில் தமது சேனைகளாக்கிக்கொண்டார். அப்பால் தன்னைக் கொல்லவந்த நகுவெண்டலையையும் தமது கரத்திலேந்தினார். பின்னர் தாம் கற்ற அதர்வண மந்திரங்களையெல்லாம் ஒரு துடியுருப்பெறச்செய்து அனுப்பினர். திசைகளெல்லாம் செவிடுபடும்படி ஒலித்து வந்த அவற்றை ஈசன் கரத்திலேந்தினார். இறுதியாக முனிவர்கள் 'முயலகன்' என்ற அரக்கனை யுண்டுபண்ணி வேள்வித்தீயை ஒன்று சேர்த்து அனுப்பினார்கள். சகல லோகங்களும் கலங்கும்படி விரைந்தோடிவந்த அவ்வேள்வித்தீயை சிவபிரான் மழுவாகத்தமது கையிலேந்தி முயலகனைக்கொன்று நர்த்தனம் செய்தார். (என்று கூறப்படுகிறது).

வாசகர்களே ! நும்மனம்போனவாறு யோசியுங்கள். முதல், இரண்டாவது அத்தியாயங்களில் காணப்படும் பொய்யைவிட இம்மூன்றாவது அத்தியாயத்தில் முழுப்பொய்தோன்றுகிறது. சற்றேனும் நம்பஇடமிருக்கிறதா? இல்லை; யாககுண்டமென்பது வேம்பு, அரசு, மா முதலிய சுள்ளிகளும்,

நெய் ஊற்றி எரித்துதீ வளர்ப்பதென யாவருமறிவீர். இப்படி தணலில் மூதலாவதாக அம்முனிவர்கள் மந்திரங்களால் புலி உண்டாயிற்றும். அதை மானிடரேயான முனிவர்கள் ஒருவித பழக்கமுமில்லாமல் உபசரித்து 'பரம சிவனைக்கொன்றுவா' என்றனுப்பினாராம். பூலோகத்திலிருந்து பரலோகத் திற்கு ஓடிற்றும். பரமன் கொன்று தனக்கு அதன்தோலைக் கச்சையாக அணிந்து கொண்டாராம். வாஸ்தவமற்ற உண்மை தான். நெருப்பிலிருந்து புலியுண்டாகுமா?

பின்பு அடுத்து புளுகியபடி நெருப்பில் உண்டான சூலம் எப்படி பறக்க முடியும்? எஃகு அல்லது இரும்பினால் செய்யப்படாமல் தானாகவே உண் டானதோ? பின்பு, மான்கள் பறக்குமா? பறந்தால் பூமி எப்படி யதிரும்? 'பாம்பென்றால் படையும் நடுங்குமென' ஆன்றோர் வழக்கு சான்றாகுமல் லவா? அப்படியிருக்க முனிவர்களாலேவப்பட்ட பாம்புகளை எப்படி பரமன் அணிந்துகொண்டார். பின்பு உயிரோடு இருந்தனரா? வேள்வித்தீயை எப் படி சிவன் மழுவாக ஏந்த முடியும்! இம்முனிவர்தான் எப்படி தீயை ஒன்று சேர்த்து அனுப்பினர். அவர்களுக்குக் கை சுடாதோ? நெருப்பிலே எப் படி 'முயலகன்'பிறந்தான்? அவன் மெய் இரும்போ! கல்லோ! களிமண்ணோ யாருக்குத்தெரியும்?

பழிவாங்க வந்த உயிர்களையும், வஸ்துக்களையும் பரமன் எப்படி கையி லேந்தினன். பெரிய மந்திரவாதிபோலும்! இவைகளை உண்டாக்கிய முனி வர்கள் பெரும் ஜெகஜாலர்கள் போலும்! அளந்தார்; அளந்தார்; கந்தபுராண ஆசிரியர் கணக்கு வழக்கில்லாத அண்டப்புரட்டு, ஆகாயப்புரட்டு, திடீர் புளுகு, முதலியவற்றை கொஞ்சங்கூட நம்புதற்கிடமின்றி அளந்தார். ஏமா ளிகளெல்லாம் அறிந்து இன்புறுவாரென அளந்தாரோ!

தாருகாவனத்து ரிஷிகளுக்கு அவ்வளவு பெரும் சக்தி எப்படி ஏற்பட் டதோ! யாரறிவார்? பெரும்புளுகுகள் புளுக ஆசிரியர் நன்றாக கற்றிருக் கிறார். பலே பேஷ்! "இவைகளை நம்பினோர் இன்னற்படுவர்."

---

## அத்தியாயம் 4.

### தி டீ ர் ப் பு ளு கு.

ஓர் உல்லாசமான மாலைப்போழ்தில் திருக்கைலாயத்தில் அமைந்த ஓர் பூங்காவில் பார்வதி ஆனந்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அச்சமயம் பார்வதி பரமனின் பின்புறமாக வந்து அவர் கண்களைத்தன் திருக்கரங்களால் மூடினாள். உடனே இவ்வுலகத்தில் விளங்காநின்ற கதிரவன், சந்திரன்,

அக்கினி, முதலியன தமது ஒளி மங்கி எங்கும் காரிருள சூழ்ந்தது. இத் திருவிளையாடல் உமைக்கும் சிவனுக்கும் ஒரு கணப்போழ்தாயினும் ஈரேழு புவனங்களுக்கு எண்ணற்ற யுகங்களாயின. ஜீவராசிகளெல்லாம் உயிர்நிலை தப்பி மாண்டன. இதையறிந்த பரமன் ஜீவராசிகளுக்குண்டான இடரை நீக்கும்பொருட்டு தமது நெற்றிக்கண்ணைத்திறந்தார். உடனே சகல லோகங்களிலும் வெளிச்சமுண்டாயது. மாண்டவை மீண்டன. சூரிய சந்திரர்கள் பிரகாசித்தனர் இது தெரிந்த உமையாள் மிகவும் அஞ்சி தன் கைகளை எடுக்க உடனே தன் விரல்களின் இடையே வியர்வைநீர் உண்டானது அவ் வியர்வையை அவள் பூமியில் உதர, அக்கணமே சிந்தப்பட்ட வியர்வைநீர் பத்து கங்கைகளாக மாறி, மாப்பெரும் சமுத்திரம்போற் பெருகி, எண்ணற்கரிய கால்வாய்களாகப்பிரிந்து எங்கும் பரவி உலகங்களை அழித்தோடிற்று.

இப்பெரும் ஆபத்தைக்கண்டு திகிலடைந்த பிரமனாதியர் ஓடோடியும் நந்திதேவன் அநுமதிப்பெற்று சிவபிரானைக்கண்டு வணங்கி "ஓ! சுவாமி! மாப்பெருவெள்ளம் 'கல்' என்னும் பேரொலியுடன் ஈரேழுலகங்களையும் அழிக்கத்தொடங்கிவிட்டது. விடத்தையுண்டவா! "சகல ஜீவராசிகளையும் பாதுகாக்கவேண்டும்" என்று வேண்டி நின்றனர்.

சிவபிரான் பிரமனாதியருக்காக மனமிரங்கி அவ்வெள்ளத்தைத் தமது (தலை) ரோமத்தில் சுவரச்செய்தடக்கினர். இப்பெருமையை வியந்து பிரம்மா, விஷ்ணு முதலானவர்கள் அப்பரிசுத்தமான கங்கையைத் தமது கரங்களில் சிறிது பெற்று தத்தமுலகிற்கேகி தெளித்தனர். தெளித்த அக்கங்கை நீர் 'விரசாநதி' பரமபதத்திலும், மானதீர்த்தம் 'சத்தியலோகத்திலும், தேவ கங்கை' இந்திரலோகத்திலுமாக பெருகி ஓடிற்று.

இவைகளுள் பிரம்மலோகத்திலிருந்த கங்கையைப்பகீரதன் அரியதவஞ் செய்து சிவபிரான் சடைவழியாக பூமியிற்கொண்டு வருங்கால் தவமுனிவனாகிய சன்னுமுனிவன் வலது காதில் கங்கை புகுந்து, இடது காதின் பக்கம் வெளி வந்து பின்பு பகீரதன் தன் மூதாதையர் நற்கதியடைய கங்கையை அவர்கள் .மாண்ட இடத்தில் பரவும்படி செய்தான். இக்கங்கை பட்ட மாத்திரத்தில் இறந்து சாம்பலான அறுபதினாயிரம் (சகர) இராஜபுத்திரர்களும் மோட்சமடைந்தனராம்.

சூரியன், சந்திரன், அக்னி இம்மூன்றும் பரமசிவனுடைய நெற்றிக்கண் பிரகாசத்தினுதவியால் ஒளிபெறுவனபோலும்! சிவபிரான் கண்மூடினல் இவைகளுக்கு ஒழியில்லாதுபோகிறது. தற்போது 'இயற்கை வல்லவரெனப்படும் சூரிய சந்திரர் பகலென்றும் இரவென்றும் காட்டுவது பரமனருள்தானே? சரி; பரமன் விழித்திருந்தால் பகல், பரமன் கண்களை மூடினல்

இரவு, சூரியன், சந்திரன், அக்னி இவைகள் ஒளிமங்கி எங்கும் இருளடைகின்றது. சூரியனுக்கும் ஆசிரியர் கூற்றுக்கும் பொருத்தந்தான். ஆனல் இரவில் சந்திரோதயமாகிறதெதனல்? அப்போது சிவபிரான் தன் அரைக் கண்களை ஜாடையாய்த்திறந்துவிடுகிருரோ? இருக்கட்டும், அக்னியைக்கவனிப்போம். இதுவும் பரமனின் கண்மூடப்பட்டமையால் இருண்டுபோய் விட்டது. பின்பு பரமன் மூன்ருவது கண்ணொளியால் எரிந்ததோ? காலணுவுக்கு நெருப்புப்பெட்டி (Safety Matches) வாங்கி நினைத்த நேரம் கொளுத்தினல் எரியாதோ? பரமன் கண்திறந்ததனல்தானு ஒளிபெருகிறது. அக்னியின் ஒளியை ஒழிப்பதற்கும் உண்டுபண்ணுவதற்கும் சில மாதங்களுக்கு முன் காலஞ்சென்ற மிஸ்டர் எடிசன் அன்ருே? பிரத்தியக்ஷ தெய்வம். இவர் மின்சார சக்தியைக்கண்டுபிடித்து இவ்வுலகினில் பலவிதங்களில் உபயோகிக்கும்படி செய்தார். நினைத்தால் வெளிச்சம், நினைத்தால் இருள். இவர் பெருமை பரமசிவனுர்க்குண்டா? இன்னும் சூரியனுடைய ஒளியினுதவியாலன்ருே சந்திரன் பிரகாசிக்கிறது! (பூகோள சாஸ்திர மறிந்த ஒவ்வொருவருக்கும் இது நன்கு புலப்படும்.)

நிற்க, பார்வதி கைகளை உதறியதால் தனது விரல்களிடையே இரா நின்ற வியர்வை தரைமீதுவிழ எப்படி பத்து ஆருகப்பெருகி ஒடிற்று? எவ்வளவு பரிமாணம் வியர்வை அவள்கையில் இருந்திருக்கும்? அவ்வியர்வை சமுத்திரம்போல் பெருகி உலகத்தை அழிக்க முடியுமா? இது நம்பதக்கதா? அப்படி ஒரு வேளை உலகமழியும்படியானவெள்ளத்தை பரமசிவன் தனது ரோமத்திற்குள் எப்படி அடக்கமுடியும்? அன்றி சன்னுமுனி எப்படி இப்பெரு வெள்ளத்தை வலது காதில் வாங்கி இடது காதின் வழி வெளிவிட்டான். அவர் காது தண்ணீர் போக்கும் குழாயோ? அவர் உயிரோடிருந்தாரா? கடைசியில் இக்கங்கை நீர்பட்ட மாத்திரத்தில் சாம்பலாய்க் கிடந்த அறுபதினுயிரம் இராஜ புத்திரர்களும் மோட்சமடைந்தனரோ? மோட்சமென்பது எங்கேயிருக்கிறது? சாதாரணமாக "நீ புளுகும் புளுகு கந்தபுராணத்திற்குப்பெரிதோ" என்பர். இத்தனைபுளுகுகளும் இப்புராண மடக்கிக்கொண்டிருக்கிறது. நன்ருக யோசியுங்கள். இவைகள் உண்மையில் நடந்திருக்குமா? மேலே நடந்தவைகளையெல்லாம் தாமே நேரில் கண்டாற்போல் "திரு. கச்சயப்ப சுவாமிகள்" ஏட்டில் எழுதிவிட்டார். இவர் ஒருவேளை சிவபிரானருகில் இருந்தாரோ? ஐயோ! பாடாவதிகந்தபுராணமே

## அத்தியாயம் 5

### ஒரே திரேகம்; ஆள் இரண்டு.

---

முன்னொருகாலத்தில் பிர்மா ஜீவராசிகளைப்படைக்க நினைத்து சனகன்

சனற்குமாரன், சனந்தரன், சனாதனன் என்ற நான்கு குமாரர்களைப் படைத்தான். அவர்கள் பரமனைக்காணும் பேரறிவுபெற்று யோகிகளானார்கள். இதனால் பிரமன் தன் படைப்புதொழில் விருத்தியாகாததால் மிகவும் வருந்தி தன் பிள்ளைகளைக்கூட்டிக்கொண்டு வைகுந்தத்திற்குப்போய் விஷ்ணுவைக்கண்டு வணங்கி தன் மனக்குறையை எடுத்துரைத்து ஏதாவதொரு வழிகூறும்படி வேண்டினான்.

சக்ராயுதனாகி விஷ்ணு "அக்கருமம் நம்மால் முடிவதன்று. சிவபிரானிடம் போங்கள்" என்றருளினார். உடனே திருக்கைலாயமடைந்து நந்திதேவர் உத்தரவால் சிவபிரானை வணங்கி, "ஓ தேவாதி தேவா! பிர்ம சிருஷ்டி ஓங்காமையால் அதை அருளிச்செய்யவேண்டும்" என்று இரங்கி நின்றனர். அப்போது சிவபிரான் அவர்களை மாய்த்து சாம்பலாகச்செய்து ஏகனாயிருக்கின்ற தனது இடது புறத்தை நோக்க அதிலிருந்து உதித்த உமையைக்கலந்து விஷ்ணு பிரமன் சனாதியர்களை உண்டாக்கினான். அவர்கள் சிவபிரானை நோக்கி துதித்துநின்ற காலையில் உமைபாகன் அருள்கூர்ந்து திருக்கண்ணனைப்பார்த்து 'நமது அனுக்கிரஹமாகிய சக்தியைக்கலந்தமையால் இனி பிரம்மசிருஷ்டி விர்த்தியாகுமென்று கூறினான். அதற்கவர்கள் "ஈடேறினோமென்று ஆனந்தக்கூத்தாடி பரமசிவனை வலல்வந்து சேவித்து தத்தமதிடத்திற்குச் சென்றனர். பின்பு சிவகடாக்ஷத்தால் ஈரேழு புவனங்களையும் பிரமன் படைத்தான்.

சத்தி சிவனைப்புணர்ந்ததால் உலகத்தில் ஆண் பெண் இனங்கள் சேர்ந்து இன்பமுற்றுப் பரவின. இவ்வுலகின் தோற்றமனைத்தும் சத்திமயமாகும். சிவம் அதனைப்பொருந்தி நடிப்பிக்கும் எனக்கூறப்படுகிறது.

பிரம்ம சிருஷ்டி ஓங்கவேண்டுமென்ற பிரம்மனாதியர்களை மாய்த்து முன்போலவே சிவன் அவர்களைப்படைப்பித்தாராம். எப்படி? தன் இடப்பாகத்திலுள்ள உமையைப்புணர்ந்து உண்டு பண்ணினாராம். இது என்ன விந்தை! தனது தேகத்தில் ஒருப்பாதி ஆண் வடிவமாகவும், ஒருப்பாகம் பெண்ரூபமாகவும் இருக்கமுடியுமா? 1931ஆ திண்டுக்கல் தேசிய வாலிபர் சபையாரால் காந்தி மைதானத்தில், காந்தி ஜயந்தி விழா நடைபெற்ற சமயம் காந்தி—இர்வின் வேடஞ்சரித்து வந்த ஓர் மகமதிய பையனைப்போல் ஒருவேளை வேடமாறியிருந்திருப்பார். இருந்தாலும் எப்படித் தன் தேகத்திலுள்ள மாதைப் புணர்ந்தார்? இவருடைய குறிகளும் மாறுபட்டிருந்ததா? மிக்கவும் விந்தையாகவே இருக்கிறது.

சரி, சிவபிரான் காளை வாகனத்தில் சவாரிசெய்பவரல்லவா? பார்வதிக்கு மலைகள் போன்ற தனங்கள் இருந்ததாகச்சொல்லுகிறார்கள். இப்

பேர்ப்பட்டினங்களேயுடைய பார்வதியை இடப்பாகத்தில் வைத்திருப்பதாகவும் கந்த புராணத்தால் அறிகிறோம். இப்படியிருப்பவர் காளை வாகனத்தில் சவாரி செய்ய எறினல் மலைபோன்ற தனங்களேயுடைய பார்வதியின் தனங்களைத்தாங்க அவ்வாகனத்திற்கு முடியுமா? அப்படி வாகனந்தாங்கினலும் பரமனுக்கு மலைபோன்ற தனங்களில்லாததாலும் பார்வதி இடப்பக்கத்திலிருப்பதாலும் பாலன்ஸ் குறைந்து ஒரு பக்கமே கொடித்து கீழே விழுந்துவிடுவார்களன்றோ!

சத்தி சிவனைப் புணர்ந்தால் தான் உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் புணர்ந்து இன்பமுறுகின்றன எனக்கூறப்படுகிறது. பின்னும் இவ்வுலகின் தோற்றமனைத்தும் சத்தி மயமாகி சிவம் பொருந்தி நடிப்பிக்கிறதாகவும் கூறப்படுகிறது. அப்படியாயின் 'மன்மதன் இரதி' என்ற தெய்வங்கள் பொய்யாகின்றனவல்லவா?

---

## அத்தியாயம் 6.

### வியர்வையில் அளவற்ற ராக்ஷதர்கள்.

---

பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தேவராஜன் என்ற தேவேந்திரன் விண்ணவர்களைத்துணையாகக்கொண்டு, ராக்ஷசர்களுடன் எதிர்த்துச்சண்டையிட்டான். அச்சண்டையில் ராக்ஷசர்கள் தோல்வியடைந்தார்கள். இதனல் பல ராக்ஷச கூட்டங்கள் அழிந்தன. இதனல் ராக்ஷதராஜன் மனவி யாகூலத்துடன் சுக்கிராச்சாரியிடம் சென்று முறையிட்டான். சுக்கிராச்சாரி இவனுக்கு தைரியம் கூறி "ஓ ராக்ஷதராஜனே! நான் கூறுகிறபடி நடப்பாய் அதாவது, வேதவிதிப்படி தவத்தைச்செய்து மோக்ஷத்தைவிரும்பி யோகத்திலிருக்கின்ற மாகத ரிஷியினிடத்தில் உனது குலத்திலுதித்த கன்னிகையை அங்கு அனுப்பி, அவரிடம் மையல்கொண்டு புணரச்செய்தால் அவனிடத்தில் 'கயமுகசூரன்' உதிப்பான். அவன் உன் குலத்தை பரப்புவான் என்று சொன்னார்.

இதைக்கேட்டவுடன் அசுரேந்திரன் புன்முறுவல் பூத்து குலகுருவிடம் விடைபெற்று தன் நகரடைந்து விபுதை என்னும் கன்னிகையை அனுப்பினன். அவள் மாதங்க ரிஷி தவம் செய்யும் தவச்சாலையை நண்ணி அவரை மையல்கொள்ள வழியறியாமல், அம்முனிவருக்கு எதிரில் தானும் தவப் பள்ளிநியமித்து தவம்செய்யத்தொடங்கினள். பன்னாள்சென்றதும் மாதங்க ரிஷி கண்ணைத்திறந்து பார்த்தார். பார்த்தவுடனே அவள்மேல் மோகங்கொண்டு, வேதஒழுக்கத்தையும் தவமுறையையும்மறந்து, 'இப்பேர்க்கொத்த

புணர்ச்சியை அடைந்தோமாயின் நமதுபிராணன்நிலைநிற்குமெனநினைத்து அவ ளின் பக்கம் நின்றார். இவர் நிற்பதையுணர்ந்த விபுதை அன்னவரின் பாதத் தில் விழுந்து பணிந்து கைகூப்பி நிற்க, இம்முனிவர் "ஓ பெண்ணே! நீ கன்னிகையோ? என்றார். அதைக்கேட்ட விபுதை நகைத்து "சுவாமி! ஆம் யான் கன்னிகையே," என்றாள். உடனே முனிவர் பெண்ணே! நல்லது! என்னிடத்தில் வந்த காரணம் யாது? அதை விரைவினில் தெரிவிப்பாய்" என்று சொல்ல, விபுதை "சுவாமி! உம்மைக் கலந்து இன்புறவேண்டியே இவ்விடம் வந்தேன்" என்றுகூற, முனிவரும் மகிழ்ச்சியுடன் ஓ பெண்ணே! நீ காலதாமதம் செய்யாமல் பெண் யானை உருவத்துடன் வருவாய்; நானும் ஆண் யானை வடிவுடன் வருகிறேன்" என்று சொன்னார். உடனே அவள் பெண் யானை உருவெடுத்து நிற்க, அம்முனிவரும் களிறு உருவெடுத்து, துதிக்கையை மேலே நீட்டி ஆர்ப்பரித்து வந்து புணர்ந்தார். அப்புணர்ச்சி யினால் நீண்ட துதிக்கையும், பர்வத க்ருதியாகிய தேகத்துடன் கரங்களில் வாளும், கேடயமும்கொண்டு கயமுகாசூரன் பிறந்தான். விபுதையின் உரோமங்கள்தோறும் பெருகின வியர்வையில் அளவற்ற ராக்ஷதர்கள் ஆயுதங் கொண்டு பிறந்தனர், என்று கந்தப்புராணம் ததீசியுத்தரப்படலம், சிவ பிரான் பிள்ளைப்பேறடைந்த திருவிளையாடலில் காணப்படுகிறது.

என்னே இக்கூற்று! என்னே சுக்கிராச்சாரியாரின் புத்திகூர்மை! ஒரு குலகுருவான சுக்கிராச்சாரி தன் குலம் விர்த்தியாக தன் குலத்திலுதித்த ஓர் மங்கையை ரிஷியினிடத்தில் கூட்டிக்கொடுப்பதோ? இவ்விதம் யோசனை சொன்ன சுக்கிராச்சாரி ஏன் முன் யோசனைகூறவில்லை? இவன் முன் யோசனை கூறியிருந்தால் இவ்விதச்சண்டைசெய்து மாய்வரா? இதை சாக்ஷி யாகக்கொண்டுதான் சிலர் உத்தியோக வேட்கையால் தங்கள் மனைவிமார்களை கூட்டிக்கொடுக்கின்றனரோ? பேஷ்! இம்முனிவர் இவர்களுக்கு வழி காட்டிபோலும்! இம்முனிவர்தான் புத்தியில்லாமல் கூறினும் அந்த ராக்ஷதராஜனுக்கு புத்தியில்லைபோலும்! இது இருக்கட்டும்.

மாதங்க ரிஷியானவர் ஓர்தவசி; அப்படியிருந்தும் எதிரிலிருப்பவள் ஆண், பெண் என்ற வித்தியாசங்கூடவா தெரியவில்லை. இவர் அன்னவள்மேல் மோகங்கொண்டதோ விந்தையினும் விந்தை என்றே கூறலாம். ஏன்? தன் சுயவுருவத்துடன் காமவேட்டையாடாமல் கேவலம் மிருகமாகிய யானையின் உருக்கொண்டு புணருவானேன்! யானையினுருகொண்டு புணர்ந்ததாலன்றோ யானையைப்போல் கயமுகன்பிறந்தான். 'விபுதையின் உரோமங்கள்தோறும் (மயிர்கால்கள்தோரும்) பெருகிய வியர்வையில் அளவற்ற ராக்ஷதர்கள் எப்படி

பிறக்கமுடியும்? தவிரவும் முன்னொரு அத்தியாயத்தில் சிசு உற்பத்தியைப் பற்றி சிறிது வரைந்துள்ளோம். அப்படி இருக்க ஒரே நிமிஷத்தில் எப்படி கயமுகன் பிறந்தான்? வாசகர்களே! இதை சற்று யோசித்து பாருங்கள் பிறப்பதற்குமுன் பெயருண்டோ?

இப்புராணமே தன் கதைகளையெல்லாம் பொய்யென்று சொல்லுவதற்குப் போதிய சான்றாகவிருக்கின்றது. "பொய்சொல்லினும் பொருந்தச் சொல்லுக" கந்தபுராணத்தைக் கனவிலும் நினையாதீர்.

**" நல்லவை கொண்டு மாசை விடுக்க "**

## கந்தபுராண இரகசியம்

முதல்பாகம் முற்றிற்று.

---

இன்னும் இதன் தொடர்ச்சியும் கூடிய சீக்கிரம் வெளிவரும். அதனையும் வாங்கிப்படித்து உண்மை அறியுங்கள்.

# எனது சிறு வார்த்தை:

நமது சுயமரியாதை இயக்கம் தோன்றியநாள் முதலாய் நம்பிந்திய மக்களின் மூடநம்பிக்கை, குருட்டுப்பழக்கவழக்கங்கள், பார்ப்பன ஆதிக்கம், பெண்களின் கொடுமை ஆகியவைகள் இருந்த விடந்தெரியாமல் தலைமறைந்தோடியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் இன்னும் ஒரு சில இருந்து வருகின்றன. இவைகளும் ஒழிய என் சிற்றறிவிற்குத் தோன்றியவாறு "கந்த புராண இரகசியம்" என்ற தலைப்பில் அப்புராண ஆபாசங்களை எழுத முற்பட்டேன்.

இச்சிறிய பகுதியில் சொற்குற்றம், பொருட்குற்றங்களிருப்பினும் வாசகர்கள் மன்னித்து என்னை இன்னும் மென்மேலும் இவ்வாபாசங்களை எழுதும்படி ஊக்குவிப்பார்களென நம்புகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் பிரியன்,
சீ. ரா. முனிசாமி.

# காலஞ்சென்ற
# பனகால் அரசர்

---

ஆண்மையின் அமைப்பாய், அறிவின் ஒளியாய், அன்பின் உறுவாய், தலைவருள் மணியாய், கல்விக்கடலாய், தொண்டருட் தொண்டராய், நமது தலைவராய் இருந்து ஆருயிர் நீத்த பனகால் மன்னர் 1866-ஷு பல்லவளம் படைதொல் குடியின் மதியாய் ஜனித்தார். இவர் பதினெண் ஆண்டுகள் வரை தெலுங்கு, சமஸ்கிருதம், முதலியன கற்றார். ஆங்கிலமும் கற்று சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தர பாடசாலையில் 1882-ஷு சேர்ந்து பின்பு மாகாண கல்லூரியில் 1899-ஷு எம். ஏ., பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று, சட்ட கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டமும் பெற்றார்.

இன்னார் பள்ளிமாணவராயிருக்கும்போதே பொது ஜன ஊழியம் செய்தல் வேண்டுமென்ற விழைவு இவருக்கு அதிகமுண்டு. இவர் கல்லூரியை விடுத்ததும், பொது நலத்தொண்டில் இறங்கி சென்னை பல்கழகத்தில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். அங்கு புரிந்த தொண்டுகள் பல. தவிரவும் தென் இந்தியா ஜமீன்தார்களின் பிரதிநிதியாக இந்தியா சட்டசபையில் 1912-ஷு முதல் 1915 ஷு வரை அங்கத்தினராக இருந்து தாழ்த்தப்பட்டார் குறைகளைத் தீர்க்க அரும்பாடுபட்டார். தாழ்தப்பட்ட வகுப்பாருள் பல ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் அங்கத்தினராகவும், இவர்களின்பொருட்டு மாகாணந்தோறும் தனி இலாக்காக்களும், உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கவேண்டுமென்று வற்புறுத்தியதின் பயனாகவே அவ்வித இலாகா ஒன்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

1917-ஷு டி. எம். நாயரும், சர். பி. தியாகாரயரும் தோற்றுவித்த பார்ப்பனரல்லாதாரியக்கத்தில் தானும் ஒருவராயிருந்து தொண்டாற்றிவந்தார். 1918-ஷு ஐக்கிய பாராளுமன்ற கமிட்டி

யின் முன்பு இங்கிலாந்தில் பார்ப்பனரல்லாதார் சார்பாகவும், இந்தியாவின் பொது நலத்தின் சார்பாகவும், சாக்ஷியம் பகர்ந்தார். இவரது முக்கிய சாக்ஷியால் பார்ப்பனரல்லாதாருக்கு பிரத்தியேக உரிமைகள் வழங்கப்பட்டன.

1919-௵ தேர்தலில் பார்ப்பனரல்லாதார் பெருமித வெற்றியடைந்தனர். இவர் 1920-௵ முதல் 1926-௵ வரை இருமுறை அமைச்சு வகித்து விசாகப்பட்டிணத்தில் பெண்களுக்கென பிரத்தியேக கல்லூரியும், தீண்டப்படாதாருக்கும் கல்லூரி அளித்தார்.

இம் மாப்பெரும் வள்ளல் பனகால் அரசர் 1928-௵ டிசம்பர்-௴ 16-உ நம்மை விட்டுப் பிரிந்தார். நம் பனகால் அரசர் ஒப்புயர்வற்ற மாக்ஷிக்கும், நிபுணத்துவத்திற்கும், உவமையானவரை நம் நாட்டினில் இனி காண்பதரிது.

வாசகர்களே! இன்னாரின் பெயரால், திருச்சியில் காவிரி கொள்ளிடத்திற்கு மத்தியிலமைந்த ஸ்ரீரங்கத்தில் பனகால் வாசகசாலை ஒன்று எற்படுத்தியிருந்தோம். அவ்வமயம் நம் தோழர் டி. துரைசாமிஅவர்களே தலைவர் பதவியை வகித்தார். அந்நாளில் சில அசந்தர்பத்தால் அது மறைந்தது. இப்பொழுது இந்த 'கந்தபுராண இரகசியம்' என்னும் புஸ்தகத்தில் வரும் ஊதியத்தைக்கொண்டும், பலர் பொருளுதவியைக்கொண்டும் முன் தலைவர் அபிப்பிராயத்தின்படியே மீண்டும் அவ்வாசகசாலையை அதே பெயரோடு தோற்றுவிக்கப் போகிறோம். ஆதலால் அன்பர்கள் யாவரும் இதனை வாங்கிப்படித்து எமக்காதரவளிப்பதோடு வாசகசாலையின் முன்னேற்றத்தைக் கருதுவீரென நம்புகிறேன்.

ஸ்ரீரங்கம்.
7—3—1932.

தோழர் சீ. ரா. முனிசாமி.